**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத் துறை**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை**

**கரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(09.10.2024 முதல் 13.10.2024)**

**அறிக்கைஎண் 55/2024** **தேதி. 08.10.2024**

**கரூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை**

கரூர் மாவட்டத்தின் 04.10.24 முதல் 07.10.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 32 - 39 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 23 - 27 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 97 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 78 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 7 - 13 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தெற்கு திசை வரை பதிவானது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை கரூர் (09.10.2024 முதல் 13.10.2024)**

| கடந்த வார வானிலை (04.10.2024 முதல் 07.10.2024) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 13.10.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 04/10 | நாள்-2 05/10 | நாள்-3 06/10 | நாள்-4 07/10 | தேதி | நாள்-1 09/10 | நாள்-2 10/10 | நாள்-3 11/10 | நாள்-4 12/10 | நாள்-5 13/10 |
| 0.0 | 22.1 | 3.2 | 0.0 | மழை (மி.மீ) | 3 | 8 | 24 | 14 | 17 |
| 38 | 39 | 34 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 34 | 33 | 31 | 30 | 30 |
| 27 | 23 | 24 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 25 | 24 | 23 | 22 | 23 |
| 7 | 7 | 6 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 7 | 8 |
| 68 | 89 | 97 | 85 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 90 | 90 | 90 |
| 70 | 66 | 67 | 78 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 50 | 70 |
| 13 | 17 | 7 | 12 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 8 | 10 | 14 | 8 |
| தென் கிழக்கு | தெற்கு | தெற்கு | தென் தென் கிழக்கு | காற்றுவீசும் திசை | தென் மேற்கு | வட வட மேற்கு | கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு |

**கரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 09.10.2024 முதல் 13.10.2024 ஆகிய தினங்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30 - 34 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 22 - 25 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 8 - 14 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது | | வரும் நாட்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என்பதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும் |
| | | வடிகால் வாய்க்கால்களை தூர்வாரி பன்னை குட்டையுடன் முறையாக இணைத்து மழை நீரை சேமிக்கவும். |
| நெல் | நடவு வயல் | மழையின் அளவை பொறுத்து விவிசாயிகள் நெல் வயலுக்கு உரம் மற்றும் களைக்கொல்லியை பயன்படுத்தவும் |
| வாழை | | தற்போது நிலவும் வானிலையின் காரணமாக 5 மாதத்திற்கது மேல் ஆன வாழை மரங்களுக்கு முட்டுக் கொடுத்து பாதுகாக்கவும். |
| கால்நடைகள் | மாடு | தற்போது நிலவும் வானிலையின் காரணமாக கால்நடை தொழுவத்திலும் அதன் சுற்றியுள்ள பகுதிகளிலும் தண்ணீர் தேங்குவதை தவிர்த்து வடிகால் வசதி ஏற்படுத்தவும். தீவன பொருட்களை மழை நீரில் நனையாமல் பாதுகாக்கவும். வெளிப்புற ஒட்டுண்ணிகளை தவிர்க்க தேங்கி நிர்க்கும் மழை நீரை கால்நடைகள் குடிப்பதை தவிர்க்கவும் |
| | | மாட்டு கொட்டகையில் மழை காலங்களில் கொசுக்கள் அதிகமாக இருப்பின் நொச்சி இலை புகைமூட்டம் போடவேண்டும். |

## குறுஞ்செய்தி

வரும் நாட்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என்பதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும்

**இயக்குநர்**